பெருநகர சென்னை மாநகராட்சி

செய்தி வெளியீடு

செ.வெ.எண். 620 **நாள்: 27.10.2026**

வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக,
பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள நெடுஞ்சாலைகளில்
ஏற்பட்டுள்ள சாலைப் பள்ளங்களை நெடுஞ்சாலைத் துறையின் சார்பில் சீர்செய்யும் பணிகள்
நடைபெற்று வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள நெடுஞ்சாலைகளில் ஏற்பட்டுள்ள பள்ளங்களை, நெடுஞ்சாலைத் துறையின் சார்பில் சீர்செய்யும் பணிகள் நடைபெற்று வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் 275 கி.மீ நீளமுள்ள சாலைகள் நெடுஞ்சாலைத் துறையின் சார்பில் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட நெடுஞ்சாலைகளில் ஏற்பட்டுள்ள சாலைப் பள்ளங்களை சீரமைக்கும் பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் ஒரு பகுதியாக, தரமணி லிங்க் சாலையில் உள்ள மகாத்மா காந்தி நகர், தரமணி-வேளச்சேரி பிரதான சாலை, விஜயநகரம் சந்திப்பு, வேளச்சேரி, சாரதி நகர், பார்க் அவென்யூ பகுதி, ஒலிம்பியா, சிப்காட் போக்குவரத்து சந்திப்பு உள்வட்டச் சாலை, அண்ணா சாலையில் உள்ள ஸ்பென்சர் பிளாசா, ஆயிரம் விளக்கு மெட்ரோ நிலையம், அரசினர் தோட்டம் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள சாலைகளில் ஏற்பட்டிருந்த பள்ளங்கள் தார்க்கலவை கொண்டு சீர்செய்யப்பட்டது. நெடுஞ்சாலைகளில் உள்ள சாலைப் பள்ளங்களை சீரமைக்கும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

மாநகராட்சிப் பகுதியில் பாதுகாப்பான மற்றும் தடையற்ற போக்குவரத்தினை உறுதி செய்யும் வகையில், அனைத்து நடவடிக்கைகளும் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,
பெருநகர சென்னை மாநகராட்சி.